**பன்வில பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 27 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2020 மே 18 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 மே 30 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் பன்வில பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | ரூபா 146,107 ஆன வேலைக் கடன்கொடுத்தோர் கணக்குகளில் விடுபட்டிருந்தது | கொடுப்பனவு செய்யப்படாததால் கடன் கொடுத்தோராக்க வேண்டும். | கடன் கொடுத்தோராக்க அவசியம் இல்லாததுடன், உள்ளவாறான பெறுமதி ரூபா 146,107 ஆகும். |
| (ii) | மூலதன செலவு மற்றும் வருமானம் ரூபா 34,999,649 இனால் மிகையாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |
| (iii) | நன்கொடையாக கிடைத்திருந்த 3 சொத்துக்ளின் பெருமதி ரூபா 329,806 கொள்வனவின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |

**(ஆ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 1 முதல் 5 வருட காலத்தை விஞ்சியிருந்த கடன்பட்டோர் | பெற வேண்டிய | 3 வேலைகளின் பணம் மீள் நிரப்பப்பட்டுள்ளது என |

| | | | |
|---|---|---|---|
| | மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 2,032,121 மற்றும் 5 வருட காலத்தை விஞ்சிய மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 1,961,567 ஆனது. | மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் | அறிவிக்கிறேன். |
| (ii) | 1 முதல் 5 வருட காலத்தை விஞ்சியிருந்த செலுத்த வேண்டிய மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 7,199,289 உம் 5 வருட காலத்தை விஞ்சிய மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 2,619,143 ஆனது. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது வரை 12 வேலை கடன் கொடுத்தோர்களின் பணம் மீள் நிரப்பப்பட்டுள்ளது என அறிவிக்கிறேன். |

**(இ) கணக்காயவிற்கு தேவையான எழுத்து மூல சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுமதி ரூபா 2,818,660 ஆன காணிகளிற்கான உரித்து உருதி கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்படும் கணக்கு மீதிகளை உருதிப்படுத்தும் சான்றுகளை சமர்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | அனைத்து சொத்துக்களையும் தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**1.4 இணங்காமை**

**1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டம் | | | |
| 126 (vii)ஊ மற்றும் (xxx) உப பிரிவு | சபை அதிகார எல்லையில் காடசிப்படுத்தப்பட்டிருந்த விளம்பர பலகைகளிலிருந்து ரூபா 463,192 கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 6,838,528 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 3,675,644 ஆனது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 1,491,000 | 1,377,088 | 1,004,501 | 714,184 | 1,488,000 | 1,493,076 | 1,377,915 | 446,318 |
| (ii) | வாடகை | 2,796,045 | 1,957,425 | 741,770 | 1,243,275 | 1,228,800 | 1,124,650 | 1,103,907 | 66,915 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 3,093,000 | 3,151,119 | 3,017,719 | 156,400 | 2,845,250 | 3,077,965 | 3,026,965 | 72,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 2,879,000 | 5,026,725 | 913,690 | 5,500,534 | 2,416,600 | 3,209,775 | 1,007,405 | 2,612,269 |
| | | 10,259,045 | 11,512,357 | 5,677,680 | 7,614,393 | 7,978,650 | 8,905,466 | 6,516,192 | 3,197,502 |

#### 2.2.2 வாடகை

**கடை வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பன்வில வியாபாரக் கட்டிடத் தொகுதி கடையறைகளிலிருந்து 2019 ஆண்டிற்கு ரூபா 1,193,400 ஆன வாடகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | நிலுவை கடையறை வாடகையை அறவிடல். | வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது என அறிவிக்கிறேன். |

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 788,574 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 3,175,840 ஆக இருந்தது. | குறித்த பணத்தை சபைக்கு அழைப்பித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | மேலும் அறவிடப்பட வேண்டியதாகவுள்ளது என அறிவிக்கிறேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) உப விதகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை மேற் கொள்ள உப விதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதும் 18 விடயங்களுக்காக மாத்திரம் உப விதிகள் விதிக்கப்பட்டிருந்தன. | சபைக்கு வருமானம் ஈட்ட முடியுமான உப விதிகளை விதித்து வருமானமீட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். | பிரதேசத்திற்குரிய உப விதிகளை தயாரித்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன் |

#### (ஆ) எதிர்பார்த்த விளைவுகள் (out come) பெற்றுக் கொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2015 ஆண்டு ரூபா 1,500,000 செலவில் நிர்மாணிக்கப்பட்ட வாராந்த சந்தை கட்டிடம் விளைவற்று நிலவயது. | சொத்துக்களிலிருந்து விளைவுகளை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | பொருத்தமான கருத்திட்டம் ஒன்று தொடர்பாக கவனம் செலுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கிறது. |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்க இலக்குகளை போதியளவு இனங்கண்டு அது தொடர்பாக போதிய கடமை பொருப்புகளை செய்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு அவற்றை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | சில நோக்கங்களை இனங்கண்டுள்ளதுடன், வேலைத் திட்டம் செயற்படுத்தப்படுவதாக அறிவிக்கிறது. |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான 30 கடையறைகளுக்காக 2009 மற்றும் 2016 ஆண்டுகளில் மதிப்பீட்டை செயற்படுத்தாததால் சபைக்கு ரூபா 3,110,500 ஆன வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | மதிப்பீடு செய்து பெறுமதியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கிறது. |
| (ஆ) | சபைக்கு சொந்தமான 08 காணித் துண்டுகள் மதிப்பிடப்பட்டிருந்த போதும், மதிப்பீட்டு குத்தகை வாடகை பிரகாரம் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டு வாடகை பிரகாரம் புதிய உடன்படிக்கைகளை கைச்சாத்திட வேண்டும். | உடமையை சுவீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (இ) | சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் 07 உத்தேச திட்டங்களில் நீர் மாணிகள் பொருத்தாது ரூபா 200 ஆன நிலையான கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. | நீர்மாணிகளை பொருத்தி வருமானம் ஈட்டிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர் காலத்தில் நீர்மாணிகளை பொருத்த நடவடிக்கை எடுக்கிறேன். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 03 ஊழியர் மிகையும் 08 ஊழியர் வெற்றிடங்களும் நிலவின. | ஊழியர் வெற்றிடங்கள் நிரப்பிக்கொள்ள நடவடிக்கை எடுக்க வெண்டும். | பட்டதாரி பயிலுனர்கள் காரணமாக மிகை ஏற்பட்டுள்ளது. வெற்றிடங்களை நிரப்ப நடவடிகை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இடம் மாறிச் சென்ற 4 ஊழியர்களிடமிருந்து மற்றும் சேவை முடிவுறுத்தப்பட்ட ஒரு ஊழியரிடமிருந்து முறையே ரூபா 716,133 மற்றும் ரூபா 12,600 ஆன கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஊழியர் கடன்களை அறவிட நடவடிக்கை எடுக்க வெண்டும். | அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் சில மீதிகள் தீர்க்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கிறேன். |

**3.4 சொத்துக்கள் முகாமைதுவம்**

**3.4.1 சொத்துக்களிலிருந்து பெற வேண்டிய வருமானம் பெற்றுக் கொள்ப்படாளாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 24,880,000 பெறுமதியான 02 வாகனங்களை பயன்பாட்டிற்கு எடுத்திருக்கவில்லை. | இவ் வாகனங்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் | பயிற்றப்பட்ட சாரதிகள் இல்லாததால் பாவனைக்கு எடுக்கப்படாததுடன், சாரதிகளை ஆட்சேர்க்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**3.4.2 வளைவற்ற/குறைபயன்பாட்டு சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2 வாகனங்கள் 2 ½ வருடங்கள் முதல் 12 வருடங்கள் வரையான காலத்தினுள் விளைவற்று அலுவலக வளவில் நிருத்தி வைக்கப்பட்டிருந்தன. | விளைவற்ற வாகனங்களை பராதீனம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏலத்தில் விற்க முடியுமான வாகனங்களை ஏலத்திற்கு விடவும் மோடார் சைக்கிள் தொடர்பாக முன்நடவடிக்கை எடுக்க செயற்படுகிறேன். |